**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரியலூர்**

STC .**No.** 1025/2023

**2025 – ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05–ம் தேதி செவ்வாய்கிழமை எ.சா. 1– வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் படி) திருமதி. R.புவனேஸ்வரி M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

**எ.சா.** : 1

**பெயர்** : **குமார்** | **தொழில்** : **எடை மிசின் வியபாரம்**

**த/பெ.** : **மாரியப்பன்** | **வட்டம்** : அரியலூர்

**கிராமம்** : அரியலூர் | **வயது** : 55

**<u>05.08.2025</u>**

**( மனுதாரர் ஆஜர் )**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் எதிர்மனுதாரர் ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை சத்திய பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்றாக தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 21.07.2022 ஆம் தேதி முதல் 04.09.2024 வரை புகார்தாருக்கு G–Pay மூலம் பணம் அனுப்பியதற்கான G–Pay பரிவர்த்தனை கணக்கு விபரங்கள் எண்ணிக்கை–21 இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 65 B –ன் படியான சான்றுடன் **எ.சா.ஆ. 1** ஆகும். புகார்தாரர் என் மீது கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கை அறிக்கை Online copy **எ.சா.ஆ. 2** ஆகும். 17.11.2024 தேதி புகார்தாரர் எனது வீட்டிற்கு வந்து வலுக்கட்டயமாக பத்திரத்தை பிடுங்கி கொண்டு எழுதி கொடுத்த ஆவணம் **எ.சா.ஆ. 3** ஆகும். (ஆவணங்கள் வழக்கிற்கு சம்மந்தம் இல்லாமலும் நகல்களாகவும் இருப்பதால் மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் இந்த ஆவணங்களை குறியீடு

செய்ய ஆட்சேபனை செய்தார்.)  ஆகியவற்றை ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன். மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

(ஒம்) திருமதி.R.சங்கீதா சேகர்,
நீதித்துறை நடுவர் எண்–I,
அரியலூர்.